# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27 சுபகிருது ஆண்டு/ சித்திரை–வைகாசி / மே –2023 ஜோதி: 5

மாத பூசத்திருநாள்: 24.5.2023 அடுத்த மாதம் பூசம்: 21.6.2023



தெய்வத்திரு.
**சதீஷ்ராஜ் அடிகளார்,**
நிறுவனர்

தயவுத்திருமதி.
**தனலட்சுமி அம்மையார்,**
ஆசிரியர், வெளியிடுபவர்
மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:
**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**
புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,
முதன்மைச்சாலை, சென்னை– 600011.
தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| வடலூர் அருட்பயணம் | 6 |
| அருள்விளக்க மாலை பாடல் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| அதிகாலையில் எழுப்பும் அதிசய மூலிகை | 10 |
| வேதாத்திரி மகரிஷி அருள் வார்த்தைகள் | 12 |
| அனுபவ ஆனந்த தீபிகை உபதேச வினா-விடை | 14 |
| வறுமையிலும் உண்மை | 16 |
| உயிரின் உரிமை | 20 |
| அன்பர்களின் அனுபவங்கள் | 24 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் | 26 |
| ஒழிவில் ஒடுக்கம் | 31 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## அருட்பெருஞ்சோதி பதியின் உடல் அங்கங்களைக் கூறியது

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தன்னுள் கலந்து என்றும் பிரிவுறாது இருப்பேன் எனத் தம்மேல் ஆணையிட்டுக் கூறிப் பிறிவற ஒன்றாகி இருக்கிறார். அப்பொழுது அவர் உடல் அங்கங்கள் எப்படி எப்படியாக உள்ளன. எது எதுவாக வெல்லாம் உள்ளன என்று பார்த்தறிந்த வள்ளலார் கருணையோடும் இரக்கத்தோடும் நமக்கறிவிக்கின்றார்.

ஆண்டவர் தம்மோடு வந்து கலத்தல்



என்ற பேற்றினையே யாரும் பெறாத பொழுது, தன்னோடு கலந்த ஆண்டவரின் உடல் அங்கங்களை யார் கூறிட முடியும்? கூறவல்லவர் தாம் யார்?

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அங்கங்கள்: 1.பார் முதலாக எண்ணப்படும் ஐந்து பெரும் பூதங்கள் 2. அனைத்துயிர்களுக்கும் உள்ள பொறிகள் மற்றும் புலன்கள். 3. அனைத்து உயிர்களுக்கும் உள்ள கரணங் களாம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம். 5. இவைகளின் பகுதிகள், 6.காலம் முதலாக எண்ணப்படுகின்ற கருவிகள் 7. இவைகளுக்கு எல்லாம் மேலாக இருக்கும் சுத்த பரம். 8. இதனை முதலாகக் கொண்ட நாதம் வரையில் உள்ளவைகள். 9. அதற்குமேல் பரவிந்து 10. அதற்குமேல் பர நாதம் இவைகளைத் தமது திகழ் அங்கங்களாகக் கொண்டிருப்பவர் ஆண்டவர். இவ்வாறுள்ள அங்கங்களைத் தாங்கிய ஆண்டவர் தம் உடம்பில் புகுந்த தனால் தானும் இவ்வாறுள்ள 10வித அங்கங்களை அடைந்து விட்டவர் வள்ளலார். இதனை யார் பெற்றார்கள். பாடலைப் பார்ப்போம்.

**பாராதி பூதமொடு பொறிபுலன் கரணமும்**
**பகுதியும் கால முதலாப்**
**பகர்கின்ற காலமும் அவைக்கு மேல் உறுசுத்த**
**பரமாதி நாதம் வரையும்**
**சீராய பரவிந்து பரநாதமும் முந்தனது**
**திகழங்கம் என்றுரைப்பத்**

திருவருட் பேரொளியில் ஆனந்த நடனமிடும்
தெய்வமே–3670

## 53. ஆராலும் அறிந்தும் பார்க்க முடியாத உயர்நிலையில் இருந்தது.

நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது என்று கூறி (3630) எனக்கு எவ்வுலகிலும் யார் சரிசமமானவர் (4813) என்று கூறியவர் இங்கே யாராலும் அறிந்து கொள்ள முடியா உயர்ந்த நிலையில் தன்னை ஆண்டவர் வைத்ததாகக் கூறுகிறார்.

ஆண்டவர் இதுவரை யாருக்கும். யாராலும் அறிந்து கொள்ள முடியாத உயர்ந்த நிலையில் தன்னை உயரத்தில் வைத்ததாக எல்லாம் அறிந்த எல்லாம் வல்ல வள்ளலாரே கூறும் பொழுது, அவர் பெற்ற வரம் போல யார் பெற்றார்? யாரால் பெற முடியும்? பாடலைப் பார்ப்போம்.

**ஆராலும் அறியாத உயர்நிலையில் எனைவைத்த**
**அரசே அருட்சோதியே**
**அகர முழுதுமாய் அப்பாலும் ஆகிநிறை**
**அமுத நடராஜ பதியே–3670**

## 54. பிறவிப் பெருங்கடலை கடந்து அதற்கு அப்பால் உள்ளவைகளைக் கூறியது.

திருவள்ளுவர் தம்குறளில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் 10வது குறளாகக் கூறப்பெற்ற குறள்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேரா தார்**

என்பர். இறைவனது திருவடியைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய கடலைக் கடந்து கரை சேர்வார்கள். அல்லாதவர்கள் நீந்திக் கரைசேர மாட்டாது பிறவியாகிய கடலுள் அமிழ்வர் என்பதே இக்குறளின் பொருள்.

இதில் பிறவியாகிய கடலைக் கடந்து இறைவனை அடையலாம் என்பதோடு வள்ளுவர் நிறுத்திக் கொண்டார். வள்ளலாரோ, பிறவியாகிய கடலைக் கடந்து கரையேறிய பின் அடைய வேண்டிய நிலைகளைப் பட்டியல் இடுகின்றார். அவை வருமாறு :

1. கண்டு கொண்டேன், 2. கோவில் கதவு திறக்கப் பெறுதல் 3. காட்சி எல்லாம் காணல், 4. திரு அமுது உண்ணல், 5. அருள் ஒளியால் அனைத்தும் அறிந்து தெளிதல், 6. அறிவே உரு ஆதல் 7. அழியாமை அடைதல், 8 உடல் வெப்பம் மாறிக் குளிச்சியாக்கப் பெறுதல், 9. உயிர் கிளர்ந்து எழுதல், 10.உள்ளம் எல்லாம் தழைத்தல், 11. உள்ள பொருள் உள்ளபடி உள்ளதுவாய் நிறைதல், 12. இடர் தவிக்கும் சித்தியெலாம் தன் வசமாகப் பெற்று ஓங்குதல்

இந்தப் பன்னிரண்டு நிலைகளும் பிறவியாகிய கடலைக் கடந்து கரையேறிய பின் அடைய வேண்டிய நிலைகள். இத்தனையையும் கடந்து நின்றாலே இறைவனை அடையும் நிலையாகும்.

இத்தனை நிலைகளைத் திருவள்ளுவரே கூறிடவில்லை. வேறு யார் அறிய முடியும். பாடலைப் பார்ப்போம்.

**கடல் கடந்தேன் கரையடைந்தேன் கண்டு கொண்டேன் கோவில்**
**கதவு திறந் திடப்பெற்றேன் காட்சிஎலாங் கண்டேன்**
**அடர்கடந்த திருவமுதுண் டருள் ஒளியில் அனைத்தும்**
**அறிந்து தெளிந் தறிவுருவாய் அழியாமை அடைந்தேன்**
**உடல் குளிர்ந்தேன் உயிர்கிளர்ந்தேன் உள்ளமெல்லாம் தழைந்தேன்**
**உள்ளபொருள் உள்ளபடி உள்ளவனாய் நிறைந்தேன்**
**இடர் தவிக்கும் சித்தியெலாம் என்வசம் மாயினவே**
**இத்தனையும் பொதுநடஞ்செய் இறைவனருட் செயலே–5449**

இவ்வளவு பெரிய நிலைகளையும் யாராலும் அடைய முடியாது. அதனால் இத்தனையும் பொது நடஞ்செய் இறைவனது அருள்செயல் கூட்டுவிக்க வேண்டும் என்கிறார்.



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: 9003034056

மாத பூச நாள்: 24-05-2023

குறிப்பு: அடுத்த பயணம்: 21-06-2023

# அருள்விளக்க மாலை பாடல்

**கொடுத்திடநான் எடுத்திடவும் குறையாத நிதியே**
**கொல்லாத நெறியேசித்(து) எல்லாம்செய் பதியே**
**மடுத்திடவும் அடுத்(து) அடுத்தே மடுப்பதற்குள் ஆசை**
**வைப்பதன்றி வெறுப்பறியா வண்ண நிறை அமுதே**
**எடுத்(து) எடுத்துப் புகன்றாலும் உலவாத ஒளியே**
**என்னுயிரே என்னுயிர்க்(கு) இசைந்தபெருந் துணையே**
**தடுத்திடவல் லார்இல்லாத் தனிமுதற்பேர் அரசே**
**தாழ்மொழிஎன்(று) இகழாதே தரித்துமகிழ்ந்(து) அருளே**

## விளக்கம்

உலக பொருட்செல்வம் எல்லாம் எடுத்து எடுத்துப் பிறர்க்கு கொடுத்துக் கொண்டே இருந்தால் குறைந்து போவதாம். ஆனால் "இவ்வருட்செல்வமோ" பிறர்க்கு வழங்குவதற்காக எடுக்கின்றேன் எடுத்துக் கொண்டே இருக்கின்றான். எனினும் சிறிதும் குறைவுபடுகின்றதேயில்லை, என வியந்தோதுகின்றார். இவர்தம் மார்க்கம், சுத்த சன்மார்க்கம், இதில் யாவும் அருள் ஒளியின் காரியப்பாடேயாம். இது அகத்திலிருந்து, அனகத்தே நிறைவு பெற்றுள்ளது. இவ் அனக நெறியில் கொலைக்கும், புலைக்கும் இடமே இல்லை. பிற உலக நெறிகளில் தான் அவற்றிற்கு இடம் உண்டு.



அவற்றில் கொலைபுலையில்லாமல் இருக்கவே முடியாதாம். இந்தபதி நிறை அமுதமாக விளங்குகின்றார். அவ்வமுதம் அருந்த அருந்த இன்னும் அருந்த வேண்டும் என்றே உள்ளத்தில் அவ்வா எழுகின்றதாம். சிறிதும் வெறுப்போ, தெவிட்டலோ உண்டாகின்றதில்லையாம். மேலும் அது குறைவுபடாது நிறைவுற்றே விளங்குகின்றதாம்.

இவ்ஒளிக்கு எல்லை ஏது? இதைப்பற்றி கூறப்படும் விளக்கத்திற்கு முடிவேயில்லை. இவ் ஒளியை என்னுயிரே என்றும், என் உயிருக்கு இசைந்து கிடைக்கப் பெற்றுள்ள பெரிய துணையே, என்றும் போற்றுகின்றார்.

இவரது பொருள்களுக்கும், ஆற்றல்களுக்கும் அளவேது? இவரை தடுக்கக்கூடியவர்கள் தான் உண்டோ. மறுப்பதற்கு எவருக்கும் ஆற்றல் இல்லை. இவருக்குத் தான் இந்த மாலை வழங்குகின்றேன். இதனை அன்போடு ஏற்றுக்கொண்டு அருள் பாலிக்கின்றார். இது சத்தியம் என்பது வள்ளலார் ஆணை.

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**வாழிநீ டூழி வாழிஎன்று ஓங்குபேர்**
**ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி 230**

சிவசக்தி அளித்த உடலில் நின்று உலகில் வாழ்க எனவும், நீண்ட வாழ் நாளைப் பெறுக எனவும். ஓங்கிய பெரிய அருள் ஆணையை எனக்கு அளித்தருள் வது அருட்பெருஞ் ஜோதி.

**மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்துஇதை**
**ஆய்ந்திடுஎன்று உரைத்த அருட்பெருஞ் ஜோதி 232**

இறை ஒளிக் காட்சி காணாது உடலால் இறந்தவர்கள், அதனைப் பெறுவதற்கு மீண்டும் தோன்றும் முறையை எனக்கு அருளி, இதன் உண்மையை ஆராய்ந்து காண்பாயாக எனக் கூறி அருளியது அருட்பெருஞ் ஜோதி.

**எச்சம் நினக்குஇலை எல்லாம் பெறுகஎன்று**
**அச்சம் தவிர்த்தஎன் அருட்பெருஞ் ஜோதி 234**

மேலைப் பிறவிக்கான வினையின் குறை எதுவும் உனக்கு இல்லை, ஆதலால் நின்னால் பெற முடியாத பொருள் ஒன்றும் இல்லை; எல்லாவற்றையும் குறை வின்றிப் பெறுவாயாக என அருளி, என் னுடைய கலக்கத்தை நீக்கி அருளியது அருட்பெருஞ் ஜோதி.'

**நீடுக நீயே நீள்உலகு அனைத்தும் நின்று**
**ஆடுக என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 236**

திருவருட் செயலில் நீ நெடிது ஓங்குக என்றும், நெடிய இவ்வுலகில் நீயும் நெடுங்காலம் (காலம் உள்ளளவும்) இருந்து திருவருளின் செயலைப் பரப்புக என்றும், தன் அருள் ஒளியை என்னுள் புகச் செய்து, என்னுடன் ஒன்றியிருந்து எனக்கு அருளியது அருட்பெருஞ் ஜோதி.

**முத்திறல் வடிவமும் முன்னிஆங்கு எய்துறும்**
**அத்திறல் எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 238**

சுத்த தேகம் ( உருவ உடல்), பிரணவ தேகம் (அருஉருவ உடல்), ஞான தேகம் (அருவ உடல்) என்னும் மூவகை உடல் களையும், நான் எண்ணியபோது எண் ணியவாறு அடையும் ஆற்றலை, எனக்கு அருளியது அருட்பெருஞ் ஜோதி.

**மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்**
**ஆவகை எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 240**

கரும சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்ற மூன்றுவகை சித்திகளின் பயன்கள் யாவும், எனக்குக் கைவருமாறு அருள் செய்வது அருட்பெருஞ் ஜோதி.

**கருமசித் திகளின் கலைபல கோடியும்**
**அரசுற எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 242**

செயல் வகைகளைச் சிந்தித்தவாறு செய்து முடிக்கும் ஆற்றலாகிய கலைத் திறங்கள் எண்ணற்ற வற்றை, நான் முன் னின்று செய்ய எனக்கு அருள்புரிவது அருட்பெருஞ் ஜோதி.

**யோகசித் திகள்வகை உறுபல கோடியும்**
**ஆகஎன்று எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 244**

மனம் ஒன்றி நின்று செயல்களைச் சிறப்

புறச் செய்து முடித்தலாகிய யோக சித்திகளின் விரிவு வகைகள் கணக்கற்றவைகளையும், சிந்தித்தவாறு செய்து முடிக்கும் திறம் அனைத்தையும் எனக்குண்டாக அருளுவது அருட்பெருஞ் ஜோதி.

**ஞானசித் தியின்வகை நல்விரிவு அனைத்தும்**
**ஆனிஇன்று எனக்குஅருள் அருட்பெருஞ் ஜோதி 246**

யோகியர் உள்வளர் ஆன்ம சக்தி கொண்டு செயல்படும் ஞானசித்தியில் உள்ள விரிவான வகைகள் யாவும், எனக்குக் குறைவின்றி கிடைக்குமாறு அருள் செய்வது அருட்பெருஞ் ஜோதி.

**புடைஉறு சித்தியின் பொருட்டே முத்தியை**
**அடைவதுஎன்று அருளிய அருட்பெருஞ் ஜோதி 248**

ஆன்மாக்கள் பிறப்பறுக்கச் செய்யும் முத்தி முயற்சியின் உள்ளக் குறிப்பு அனைத்தும், கடவுள் அருள் ஆற்றலை விளக்கச் செய்யும் திருச்செயலான மேலே கூறிய மூவகைச் சித்திகளைப் பெறும் பொருட்டே என்று அருள் புரிந்தது அருட்பெருஞ் ஜோதி.

(வேறு)

மேலோங்கிய நிலையில் அடைய வேண்டிய சித்தி (இரண்டறக் கலத்தல்) அனுபவ நிலை பற்றியே, முத்தியை அடைவது என்று எனக்கு விளக்கி அருளியது அருட்பெருஞ் ஜோதி.

**முத்திஎன் பதுநிலை முன்உரு சாதனம்**
**அத்தகவு என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 250**

முத்திப் பேறு எனக் கூறுவது ஆன்மா சிவமாக ஆகும் பேரின்ப நிலை என்றும், அதனை அடையும் செயல் வகையாவது உலகில் அன்புச் செயலோடு விளங்கும் முத்தி முயற்சி என்றும் உபதேசித்தருள்வது அருட்பெருஞ் சோதி



# அதிகாலையில் எழுப்பும் அதிசய மூலிகை

## அதிகாலையில் எளிதாக எழ எட்டு தகவல்கள்

1. அதிகாலையில் எழுவதில் உணவை சமைக்கும் முறை முதன்மையான பங்கை வகிக்கின்றது. சாதத்தை வடித்து சாப்பிட வேண்டும். எனவே அதில் தாமசம் உண்டாகாது. உணவு உண்ட 3 மணி நேரத்திற்கு பிறகே உண்ண வேண்டும். இடையில் எதுவும் உண்ணக் கூடாது. அப்படி உண்டால் செரிமானக் கோளாறை உண்டாக்கி அது சோம்பலை ஏற்படுத்தும். மேலும் பசிக்காமல் உண்ணக்கூடாது. உணவில் மிளகு அதிக அளவு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. மதிய உணவிற்கு பிறகு 20 நிமிடம் இடது புறமாக படுத்து ஓய்வு எடுக்க வேண்டும். ஆனால் தூங்க கூடாது. பகல் பொழுதில் எப்போதும் தூங்கவே கூடாது. அது ஆயுளை குறைக்கும் ஆரோக்கியத்தை கெடுக்கும். கண்ணொளி குறைப்பாட்டை உண்டாக்கும் இரவு சரியாக தூங்க முடியாது. எனவே அதிகாலையில் எழுவதும் கடினமாகும். இடது புறமாக ஒருக்களித்துப் படுத்தால் சுவாசமானது சூரியக் கலையில் நடைபெற்று விரைவில் உடல் அசதி நீங்கி நல்ல சுறுசுறுப்பு உண்டாகும்.

3. தாகத்திற்கு மிதமான வெந்நீரே குடிக்க வேண்டும். நன்கு காய்ச்சிய நீராக இருந்தாலும் குளிர்ந்த பிறகு குடிக்க கூடாது. மிதமான சூட்டிலேயே குடிக்க வேண்டும். சுக்கு குடிநீர் மிக மிக சிறந்தது.



4. அதிகாலையில் எழுவதில் மிக முதன்மையான பங்கு வகிப்பது இரவு உணவு. பகல் உணவில் பாதி அளவே இரவு உணவு இருக்க வேண்டும். வாயுவான பதார்த்தங்கள், குளிர்ச்சியான பதார்த்தங்கள் ஆகியவற்றை இரவு உணவில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. உட



லுக்கு உஷ்ணத்தை தரக்கூடிய பதார்த் தங்களையே அறிந்து உண்ண வேண்டும். சிறுகத்திரி, முருங்கைக் காய், அவரை வற்றல், சுண்டைக்காய், தூது வளங்காய் போன்ற உஷ்ணமான பதார்த் தங்களை இரவு உணவில் சேர்த்து கொள்வது சிறப்பு. இரவு உணவை 7 மணிக்கெல்லாம் எடுத்துக் கொள்வது நல்ல பலனை தரும்.

5. இரவு உணவிற்கு பிறகு சிறிது நேரம் நடை பழக வேண்டும். படுக்கும் முன் சிறிது நேரம் தியானம் செய்ய வேண்டும். இரவில் தூங்கும் அறையில் தீபம் இல் லாமல் இருக்கக் கூடாது. சிறு வெளிச் சமாவது இருக்க வேண்டும்.

6. அதிகாலையில் எழுந்தவுடன் படுக்கை யிலேயே சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்துவிட்டு, மல ஜலம் கழித்துவிட்டு பல் துலக்கிய பிறகு, வழலை எடுக்க வேண்டும். இப்படி வழலை எடுப்பதால் கபநீர், பித்தநீர், வெளியாகும். எனவே மீண்டும் படுக்க வேண்டும் என்னும் எண்ணம் தோன்றாது. பித்தநீர் நமக்கு சோம்பல், மயக்கம், அதிகதூக்கம் போன்ற கெடுதிகளை உண்டாக்கக்கூடி யது. அதை தினந்தோறும் வெளியேற் றப்படுவதால், அதிகாலையில் எழுவது மிக எளிதாகும்.

7. வழலை எடுத்த பிறகு வேறு எந்த வேலைகளிலும் ஈடுபடாமல் சூரியன் உதயமாகிற வரையில் தியானத்தில் இருக்க வேண்டும். கண்களை மூடி தியானிப்பது தூக்கத்தை விட மிகச்சி றந்த ஓய்வாகும்.

8. நம்மை அதிகாலையில் எழுப்பும் அதிசய மூலிகை கரிசலாங்கண்ணி. கரி சலாங்கண்ணியை தினந்தோறும் எந்த வகையிலாவது உட்கொள்ள வேண்டும். இது உடலில் உள்ள எல்லா அசுத் தங்களையும் நீக்க வல்லது. உள்உறுப்புக் கள் அனைத்தையும் புதுப்பிக்க வல்லது. அசுத்தம் நீக்கப்பட்டு, உடம்பில் மயக் கம், சோம்பல் பெறும் தூக்கம் போன்ற கெடுதிகள் உண்டாகாது. நம்மை நோயின்றி எப்போதும் ஆரோக்கியமாக வைத்திருக்கும். நல் ஒழுக்கத்தில் பழக இந்த மூலிகை பெறும் துணையாக உள்ளது.

இந்த மூலிகையை தினந்தோறும் எடுத் துக் கொள்பவர்கள் அதிகாலையில் 3 மணிக்கு எல்லாம் எழுந்து விடுவார் கள். அசைவம் உண்பவர்களுக்கு இந்த மூலிகை பலனளிக்காது. மேற்குறித்த மூலிகையை அலட்சியம் செய்யாது, ஆசானியின் திருவடிக்கண்ணில் இலட் சியம் வைத்து எவ்வித தந்திரத்தினா லாவது தினம் தினம் உட்கொண்டால் தேகக்கெடுதியாகிய அசுத்தம் நீங்கி, தேகம் வலுஉள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முக்தி அடைவதற்கும் சகாய மாக இருக்கும்.

# இன்பமாக வாழ அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அருள் வார்த்தைகள்

மனிதனுடைய மனதிலே ஒரு நிறைவு வேண்டும். அந்த நிறைவிலிருந்து எழக்கூடியது தான் இன்பமான வாழ்வு என்பது ஆகும். மனிதனுக்கு உண்மையிலே வறுமை என்பது இல்லை. பிறந்த மனிதனுக்கு இயற்கையிலேயே கடைசி வரையிலே எல்லா வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மனிதன் ஒருவரை பார்த்து அவரைப் போல் நாம் இல்லையே என்று நினைத்து தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டு துன்புறுகிறான். அவன் தன்னிடம் உள்ள ஆற்றலை உணர்ந்து, வளர்த்துக் கொள்ளும் திறமை பொறாமையும் செயல்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டாமையுமே சோர்வு, வறுமை உண்டாவதற்குரிய காரணங்களாம்.



மனதை களங்கப்படுத்திக்கொண்டும், தனக்குத் தானே ஒரு எல்லை கட்டிக் கொண்டும், அதிலேயே மனத்தை சிக்க வைத்துக் கொண்டும், இது வேண்டும், அது வேண்டும் என்று எப்பொழுதும் நினைத்துக் கொண்டு இருப்பதனாலேயே எல்லாம் குறையாகவே தெரிகிறது.

இந்த குறையை நிவர்த்தி செய்யவும், எந்த நேரத்திலும் மனக்குறை எழாதவறு இருக்கவும் என்ன செய்ய வேண்டும் என்றால், இயற்கையானது ஆயிரமாயிரம் இன்பங்கள் உள்ளடக்கி உள்ள ஒரு அமைப்பு என்பதை நன்றாக உணர்ந்து கொள்ளத்தக்க அளவில் சிந்தனையிலே உயர்வு வேண்டும்.

உலகிலேயே மிக உயர்ந்த பிறப்பு இந்த மனிதப் பிறப்பு. கிடைத்தற்கரிய பிறப்பு. இந்த உடல் அமைப்பு அமைந்த விதத்தை உற்று நோக்கினால், இந்த உடலுக்குள்ளாக இயங்குகின்ற உயிரமைப்பானது படர்க்கை நிலையை எய்தி, பிரபஞ்ச பொருட்களை உணர்ந்து கொள்ளக்கூடிய அளவு ஆற்றலையும், திறமையையும் பெற்றிருப்பதுடன், தன்னையும் உணருகிறது. அத்தகைய ஆற்றல் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்கு ஆற்றலும், சக்தியும் இருந்தும் மனிதன் குறையுள்ளவனாகவே இருக்கிறான்.

மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிப் பொருளாக உள்ள தெய்வநிலை, மெய்ப்பொருள் நிலைதான். அந்த மெய்ப்பொருளின் ஒரு பிரிவாகவே மனிதனுடைய அறிவு இருக்கிறது. அது எல்லைக் கட்டிக்கொண்டு இருப்பதால் எனக்கு இது வேண்டும், அது வேண்டும், இன்னும் வேண்டும் என்று

அலைகிறான்.

ஆனால் அறிவானது அதனுடைய முழுமையை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. அது சரியான பாதையிலே திரும்புவதற்கு நாம் இடம் கொடுக்காததனாலேயே அதற்கு எங்கு இடம் கிடைக்கிறதோ அங்கேயே தங்கி நிலைத்து நின்று விடுகிறது. இதுவே மேலும் இது வேண்டும், இன்னும் வேண்டும் என்ற நிலையில் ஆசையாக மாறுகிறது. இன்னும் வேகம் அதிகரித்தால் பேராசை யாக மாறுகிறது. அப்படி ஆசையாக மாறும்போது அதற்கு தடை ஏற்படுமே யானால், அந்த தடையை நீக்க முயற்சிக் கும் போது உடலில் உள்ள உணர்ச்சிகள் எல்லாம் செயல்படும் போது சினமாக வடிக்கின்றது. இந்த சினத்தோடு கூடிய ஆசையே கடும் பற்று ஆகும். இன்னும் எனக்கு வேண்டும் என்பதோடு பிறர் பொருட்களையும் சேர்த்துக் கொள்ள லாம் என்ற ஆசையும் வளருகிறது.

– தொடரும்

# வள்ளலார் வரலாறு

## (மாணவர்களுக்கான ஒருவரி வினா-விடை)

**81. தருமச்சாலையில் வள்ளலாருக்கு இறைவன் செய்த அருட் செயல்கள் யாவை ?**

*1. எல்லாத் தவப்பயனையும் ஒருபகற் பொழுதில் தந்தது.*

*2 பயத்தோடு படுத்திருந்த வள்ளலாரை எழுப்பி அணைத்து*

*அருள் தந்தது.*

*3. திருவடி தீக்கை அளித்தது.*

**82. தருமச்சாலையில் நிகழ்ந்த அற்புதங்கள் யாவை?**

*பத்துபேருக்கு இருந்த உணவு நூறு பேருக்குப் பரிமாறப்பட்டது, சமைக்க அரிசி இல்லாதபோது மூன்று வண்டி அரிசி வந்தது, திரையில் சிதம்பர தரி சனம் காட்டியது.*

**83. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் காலத்தில் வழிபாடு உண்டா?**

*உண்டு.*

**84. எப்படி?**

*சத்தியஞான தீபம் அருவுருவம்,*

*ஞானசிங்காதன பீடம் அருவம்.*

**85. அதன் சிறப்பு என்ன ?**

*பக்குவர்களுக்குச் சத்தியஞானதீபமும், உத்தமர்களுக்கு ஞானசிங்காதன பீடமும் அருளைப் பொழியும்.*

**86. தற்போதைய வழிபாடு எப்படி ?**

*வள்ளளார்– உருவம், சத்தியஞானதீபம்– அருவுருவம், ஞானசிங்காதன பீடம்–அருவம்*

**87. அதன் சிறப்பு என்ன ?**

*பாமரமக்களுக்கு வள்ளலார் திருவுருவ மும், பக்குவர்களுக்குச் சத்தியஞான தீபமும், உத்தமர்களுக்கு ஞானசிங்கா தன பீடமும் அருளைப் பொழி கின்றது.*

**88. வள்ளலார் தொடங்கிய சாத்திர சாலை எது ?**

*சன்மார்க்க போதினி.*

*89.* **சன்மார்க்க போதினி என்றால் என்ன ?**

*சன்மார்க்கம் போதிக்கும் பாடசாலை.*

**90, சன்பார்க்கப் பாடசாலையில் யாருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது?**

*சிறுவர் முதல் பெரியோர் வரை.*

ஸ்ரீ சாது நாராயண ஞான தேசிகர் அருளிய

# அனுபவ ஆனந்த தீபிகை உபதேச வினா-விடை

**உரையாக்கம்: ஜோதி, வீ.கோடீஸ்வரன், காஞ்சிபுரம்**

**46.அரியர் என்பவர் யாவர்?**

மேலான இன்பத்தைத் தவிர உலகியில் இன்பத்தை விரும்பாதவர்கள்.

**47. சிறியர் என்பவர் யாவர்?**

நீதியில்லாது தெளிதல் இல்லாத கருத்துக்களைப் பேசுபவர்.

**48. உரியர் என்பவர் யாவர்?**

உலகிலுள்ள உயிர்களுக்கு உணமையாளராய் இருப்பவர்.

**49. ஏதும் ஈசன் செயலென்று உரைத்துப் பின் பேதமாகப் பேசுவதேன்?**

தான் படித்ததைப் பிறருக்கு உணர்த்துவார்களே ஒழிய எது உண்மை என்று ஆய்ந்து உணரமாட்டார்கள். நெறியிலும் நிற்கமாட்டார்கள்.

**50. துரியம் என்றால் என்ன?**

ஒன்றை மறந்து ஒன்றை நினைந்து உறும் கணத்திடையே உள்ள நிலையே துரியம் ஆகும்.

**51. உண்மைப் பொருளைத் தெளிந்து அடைய என்ன வழி?**

குருமொழியும், நன்னூலும், உயர்சத்திய நடை, நிராசையொடு சாந்தியும் வேண்டும். இந்நெறியைக் கடைபிடிக்கவில்லையெனில் புண்ணியப்பேறு பெற்றிருந் தாலும் பூரணத்தின் வாழ்வருளச் சிவனாலும் ஆகாது.

**52.மெய்ஞானம் உள்ளவர்களை நாம் எப்படி கண்டறிவது?**

பொய் சொல்லாதவனும், அருள் தன்மையாய் இருப்பவனும், பேரின்பச் சாகரத்தில் மூழ்கக் குறியுரைப்பவனும், அணுவளவேனும் மோச எண்ணம் இல்லாதவனும், கூடும்வரை உலகில் உபகாரம் செய்பவனுமாவான்.

**53. யோகம் செய்வது நன்றா?**

இடைகலை பிங்கலை என இரு நாடியில் இயங்கும் காற்றதனை, சூழுமுனையில் வைத்து, இயற்கையாக வரும் அமுதத்தைத் தடுத்து, உணவு உண்ணாது இருந்தால் தேகம் நசியாது வாழலாம் என சித்தர்கள் வழியென்று சொல்லுவார்கள் பெரியவர்கள். அஞ்ஞானம் நிறைந்த புத்தியீனர்களை தடுத்து ஆட்கொள்ளுவதற்காக, மூச் சடக்கல் போன்ற சாதனைகளைச் சொல்லி வைத்தார்கள். ஆதலால் அவ்வழிச் செல்லாதிருத்தல் நன்று.

**54.ஈசனது மெய்யன்பில் சிக்குபவர்கள் யாவர்?**

ஆசை அற்றவர்களும், பெருங்கருணையுடையவர்களும் ஈசன் மெய்யன்பினில் சிக்குபவர்கள்.

**55. நல்ஞானம்உடையவர்கள் எப்படி இருப்பார்கள்?**

கல்வி இல்லாதவராய் இருந்தாலும், காவி உடை அணியாது இருந்தாலும், ஞானம் பெற்றவர்கள், எதிலும் பற்றி



லாது பதைப்பற்று இருப்பார்கள்.

**56. சாபம் விடுபவர்களை தயரிகள் என்று சொல்லலாமா?**

தபசிபோல் பவித்திர வேடம் அணிந் திருந்தாலும், தம்மைப் புகழாதவர்களைக் கோபங்கொண்டு சாபம் விடுப்பவர்களை தபசிகள் என்று சொல்லுதல் பிழையாகும்.

**57. புராணக் கதை சொல்பவர்களை ஈசன் அடியார்கள் என்று போற்றலாமா?**

புராணக் கதைகளை அழகுற பேசிய தால் ஈசன் அடியார் என்று எண்ணி மக்கள் வீழ்ந்து வணங்குவார்கள். அவர் கள் தன் பிழைப்புக்காக எடுத்துச் சொன் னார்களே தவிர, உண்மையில் ஈசன் அடி யார்கள் ஆகமாட்டார்கள்.

**58. சரியை கிரியை யோகம் ஞானம் நான்கில் பெரியது எது ?**

சரியை கிரியையாகிய பக்தி என்று சொன்னால் பின்னிரண்டு யோகம் ஞானம் என்று சொன்னவர்கள் ஒன் றுந்தெரியாதவர்களா? ஞானம்தான் பெரியது.

**59. காசியில் இறந்தால் முத்தியா?**

அன்பெனும் கங்கையில் நீராடி, ஆறு உட்பகை விட்டு (காமம், கோபம், மோகம், லோபம், மதம், மாச்சர்யம்) அருநோன் பேற்று, உடற்பற்று நீங்கி, எக அறிவில் இறக்கில் உயிர் முத்திபெறும்.

**60. இறைவனை நினைந்தால் முத்தி தருமா?**

ஈரேழு உலகில் உள்ளும், புறமும் மற்றும் எங்கும் ஒன்றாய் எழில் ஞானப் பேரொளியாம் அருண அசலத்தை குருவின் திருவருளால் பெற்று, உடலை உணராது ஒருமை மனமுடையோமாகில் உணர்வோம் உயர்முத்தி.'

# வறுமையிலும் உண்மை

**வ**றுமையாகிய சிறுமையிலும் செம்மை இருக்க வேண்டும். செம்மை இம்மையும் மறுமையும் தரும்.

பாலாமணியின் புதல்வி கோதைநாயகி. அவள் மூன்று ஆண்டு நிரம்புவதற்குள் ளாகவே அவளுடைய தந்தை மரணம் அடைந்துவிட்டார். பாலாமணி செல் வர்களின் வீடுகளில் பாத்திரங்களைத் தேய்த்துக்கொடுத்தும், ஆடைகளைத் தோய்த்துக் கொடுத்தும் அதனால்வரும் ஊதியத்தைக் கொண்டு மகளை வளர்த் துவந்தாள்.

கோதைநாயகிக்கு ஐந்து வயது வந்த வுடன் பள்ளியில் வைத்தாள். கோதை நாயகி அக்கறையாகப் படித்து வந்தாள். அந்தப் பள்ளியில் கோதைநாயகிதான் முதல் தரமான மாணவியாக விளங்கி னாள். கூரிய அறிவும், சீரிய அடக்கமும் உடையவளாய் இருந்தாள். அவளுடைய குரல் தேனைப்போல இனிமையாக இருந்தது. அவள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் புன்னகை பூத்து எல்லாரிட மும் இனிமையாகப் பேசுவாள். தன்னைக் காப்பாற்றுவதற்காகத் தாயார் படுகிற துய ரத்தை எண்ணி உள்ளம் வருந்துவாள்.

பாலாமணி நல்லுணவு இல்லாமையி னாலும், கடுமையான உழைப்பினாலும் களைத்து நோய்வாய்ப்பட்டு விட்டாள். ஏழைகளுக்கு நோய்வந்தால் யார் மருத் துவம் பார்ப்பார்கள்? அவளுடைய வருவாய் இல்லாமையால் அடுப்பு புகைய வில்லை.

கோதைநாயகி தாயாருடைய நிலையைக் கண்டு பெரிதும் துயரம் அடைந்தாள். தன் வீட்டிலுள்ள சிறிய முருகன் படத்துக்கு முன் நின்று “கந்த நாயகா! கருணைக் கடலே! நான் தந்தையை இழந்தவள். தாயாரையும் இழக்கக்கூடாது. தயா நிதியே! என் தாயாருக்கு உடல்பலத்தைக் கொடுத்துக் காப்பாற்று. என்னுடைய நலத்துக்காகவே தன்னை அர்ப்பணித் துக் கொண்ட தாய்தான் எனக்கு எல் லாமாக விளங்குபவள். அவள்போனால் எனக்கு வாழ்வு இல்லை. தேவர் சிறை தீர்த்த தேவதேவா! என் தாய்க்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காத்த ருள்” என்று வேண்டிக் கொண்டாள்.



அந்த ஊரில் தரும குணம்நிறைந்த ஒரு புண்ணியவான் ஏழை களுக்குக் கோதுமை ரொட்டிகள் செய்து வழங்கிக் கொண்டி ருந்தார். அதை அறிந்த கோதைநாயகி அங் குப்போய் அவர்தரும் ரொட்டிகளை வாங் கிக்கொண்டு வந்து

தாய்க்குக் கொடுப்பாள். தாய் மகளின் அன்பைக் கண்டு கண்ணீர் வடித்தாள். மகளைப் பாதி ரொட்டி சாப்பிட வைத்துப் பாதியைத் தானும் சாப்பிடு வாள். இவ்வாறு, தினந்தோறும் ரொட்டி வாங்கிவந்து தாய்க்கு உதவி செய்து வந்தாள்.

அந்தச் செல்வர் ரொட்டி கொடுக்கும் இடத்தில் கூட்டம் மிகுதியாக இருக்கும். ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு முந் துவார்கள். சிலர் வீண் கதை பேசுவார் கள். ஒருவரை யொருவர் ஏசுவார்கள். கோதைநாயகி மட்டும் ஒருபுறம் ஒதுங்கி நின்று அமைதியாக ரொட்டி வாங்கு வாள்.

அதனைச் செல்வர் உற்றுநோக்கி வந்தார். கோதை நாயகி நல்ல அடக் கமான பெண் என்று உணர்ந்தார். அவளைத் தனியே அழைத்து, ''நீ யார்? உன் பேர் என்ன?" என்று கேட்டார். கோதைநாயகி, அன்புள்ள ஐயா! நான் ஓர் ஏழைப்பெண். என் பெயர் கோதை நாயகி. எனக்கு வயது பதினைந்து. எனக் குத் தந்தை இல்லை. தாய் மட்டும் இருக் கிறாள். என் தாய் நோய்வாய்ப்பட்டு இருக்கிறாள். அவள் சிறுவேலை செய்து என்னைக் காப்பாற்றிவந்தாள். நான் பத் தாவது வகுப்பில் படிக்கிறேன். எங்கள் வீட்டில் அடுப்புப் புகைந்து பத்து நாள்கள் ஆகிவிட்டன. பசியின் கொடுமையினால் நானும் என் தாயும் வருந்துகின்றோம். தாங்கள் கருணையுடன் கொடுக்கும் ரொட்டிகள் எனக்கும் என் தாய்க்கும் பாதி வயிற்றை நிரப்புகின்றன. எங்களைப் போன்ற ஏழைகளுக்குத் தாங்கள் கற்பக மரம் போல் கருணை செய்கின்றீர்கள். தாங்கள் இன்னும் இரண்டு ரொட்டிக்ள அதிகமாகத் தந்தால் பெரிய உபகாரமாக இருக்கும்." என்றாள்.

கோதைநாயகி தழுதழுத்த குரலில் கூறிய சொற்களைக் கேட்டு, அந்தச் செல்வர் மனம் இரங்கினார். அவளுக்கு நிரம்ப ரொட்டிகளைக் கொடுத்து அனுப்பினார். செல்வர் கோதைநாயகியைச் சோதிக்க எண்ணி மறுநாள் அவளுக்குத் தந்த எட்டு ரொட்டிகளிலும் ஒவ்வொரு பவுன் களை வைத்துத் தயாரித்துக் கொடுத்தார். கோதைநாயகி ரொட்டிகளைக் கொண் டுபோய், வீட்டில் உண்ணுகிறபோது ரொட்டிகளில் தங்கப்பவுன் இருப்பதைக் கண்டு, திடுக்கிட்டாள். தாயார் மகளைப் பார்த்து, 'அம்மா! இந்தப் பவுன்களை விற்று, இனி நாம் வயிறார உண்ணலாம். நீ நல்ல துணிகளை எடுத்துக் கொள்" எனக் கூறினாள்.

கோதைநாயகி. "அம்மா ! வறுமையில் செம்மை இருக்க வேண்டும். பிறருடைய பொருளை விரும்பக்கூடாது. இந்த எட்டுப் பவுன்களும் நம்முடைய வறுமையை நீக் கிவிட மாட்டா. இதைக் கொண்டுபோய் அந்தப் புண்ணியவானிடம் கொடுத்து விட்டு வருகின்றேன்" என்று கூறி, எட்டுப் பவுன்களையும் எடுத்துக் கொண்டுபோய், அவரிடம் தந்து வணங்கினாள். "ஐயா! தாங்கள் கொடுத்த ரொட்டிகளில் இந்தப் பவுன்கள் இருந்தன. இதனை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாள். அந்தச் செல்வர், "உலகில் உள்ள கோடீசுவரர்கள் அகப் பட்டதைச் சுருட்டிக் கொள்கிறார்கள். இந்த ஏழைச்சிறுமி வறுமையாகிய தீயில் நெளியும் நீள்புழுவைப்போல் துன்புற்றும், வறுமையில் செம்மையுடன் பவுன்களைக் கொண்டுவந்து நம்மிடம் கொடுத்தாள். எத்தனை இருந்தாலும் மேலும்மேலும் அதுவேண்டும், இது வேண்டும் என்று ஆசைப் பட்டு அல்லல்படுகிற உலகத்தில் இச்சிறுபெண் ஆசைக்கு அடிமையாகா மல் நேர்மையுடன் நடந்துகொண்டாள்." என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

நல்ல மருத்துவரைக் கொண்டு அவ ளுடைய தாயாருடைய நோயைக் குண மாக்கினார். அவள் குடும்பத்துக்கு வேண்டிய எல்லா உதவிகளும் செய்தார். கோதைநாயகியைப் படிக்க வைத்துத் திரு மணமும் செய்து வைத்தார். கோதைநா யகி சுகமாய் வாழ்ந்தாள்.









# அருள்ஜோதி அன்ன ஆலய சதீஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் ஏழாம் ஆண்டு குருபூஜை நிகழ்வுகள்





# உயிரின் உரிமை

## உயிரின் இயக்க மையம்



## புத்தர்

பிம்பிசாரன் என்ற மகத நாட்டுச் சக்கரவர்த்தி அறியாமையினால் யாகம் என்ற பெயரில் உயிர்க்கொலை . செய்யத் துணிந்தான். யாகத்திற்கு, எல்லாம் தயார் நிலையில் இருந்தது. அங்கே வந்தார் புத்தர். பலிக்காகக் கட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டியைக் கண்டார். உள்ளம் கலங்கினார்.

ஆட்டின் நிலையினை எண்ணி அச்சமுற்றார். உயிர் இரக்கம் அவர் உணர்வைப் பாதித்தது. கட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டியை அவிழ்த்துவிட்டார். பலிபீடத்தில் தன் தலையை வைத்து ஆட்டிற்குப் பதிலாகத் தன்னைவெட்டுமாறு கேட்டுக் கொண்டார். மன்னனின் மனம் மாறியது. உயிர்க் கொலையைத் தவிர்க்க நாடெங்கும் உத்த ரவிட்டான்.

## மகாவீரர்

மகாவீரர் ஓர் அற்புதத் துறவி. ஆடையினைக் கூட அவசியமில்லை என்று தானம் செய்தவர். எறும்பு, பூச்சிகள் போன்றவை நம் வீட்டினில் ஊர்ந்து சென்றாலே கொன்று கூட்டித் தள்ளிவிடுவோம். மகாவீரரின் கருணை உள்ளம் பூச்சிகள் உடல் முழுவதும் ஊர்ந்து செல்லக்கூட அனுமதித்தது. அவர் உடல் முழுவதும் ஊர்ந்து செல்லும் பூச்சிகள், அவரைக் கடித்தும் துன்புறுத்தின. வலியினால் தொட்டு சொறிந்தால் கூட அதில் ஊரும் உயிர்கள் இறந்துவிடும் என அஞ்சி அத்தனையும் பொறுத்துக்கொண்டு அமைதிகாத்துக் கொள்வது அவரது வழக்கம்.

ஒருநாள் கொடிய நாகம் ஒன்று சீறிக் கொண்டு வந்தது. முற்றும் துறந்தவருக்குப் பய உணர்வு எப்படி இருக்கும் ? மகாவீரர் அமைதிகாத்தார். அந்தக் கொடிய நாகம் அவர் கட்டை விரலைக் கடித்தது. அன்பு சிறிதும் குறையாத மகாவீரர், “உன் விஷம் என்னை ஒன்றும் செய்யாது; முதலில் உன் ஆத்மாவைக் கவனி; சக ஜீவராசிகளிடம் அன்பு செய்” என்று அந்தக் கொடிய நாகத்துக்கும் கொல்லாமை பற்றிய கொள்கையை எடுத்துச் சொன்னார் மகாவீரர்.



–தொடரும்...

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு.ஞானபிரகாசம் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலய பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

**90030 34056**











**அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் மூலமாக நடைபெறுகின்ற பசியாற்றுவித்தல் சேவையில் பங்கு கொள்ளுகின்ற அன்ன ஆலய இல்லத்தார்கள்**





அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை-600011

தொலைபேசி: 9003034056, 9600040788

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


அருள்ஜோதி

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................ | ரூ.2000/- |
| மதிய உணவு ........................................ | ரூ.5000/- |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/- |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்


பெயர்:

முகவரி:

பதிவெண்: __________

# அருள்ஜோதி புத்தகம் வாசிக்கும் அன்பர்களின் அனுபவங்கள்

எனது பெயர் பாக்கியவதி, எண்ணூரில் வசித்து வருகிறோம். நான் கடந்த 6 வருடமாக அருள் ஜோதி புத்தகத்தை படித்து வருகின்றேன். நாம் வாசிக்கின்ற எல்லாமே தகவல்களாக நம் மனதில் பதிபவை தான். இது ஒரு வகை அறிவு. அந்த அறிவு நமக்கு எப்போது கை கொடுக்கும் என்பது நமக்கு தெரியாது. ஆனால் நிச்சயம் கை கொடுக்கும். வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சவால் களுக்கு அது உதவலாம். அறிவு என்பது இறுதி வரை நம்மை விட்டு போவதில்லை. அந்த அறிவை அருள்ஜோதி புத்தகத்தை வாசிக்கும் பொழுது முழுமையாக நான் பெறுகின்றேன். புதுப்புது எண்ணங்களை வெளிப்படுத்த புதுப் புது சொற்கள் அவசியம். அத்தகைய சொற்களை அருள்ஜோதி புத்தகம் வாசிப் பதால் நான் கற்றுக் கொள்கிறேன். இப்புத்தகம் படிப்பதன் மூலம் புதிய நினைவு களை மூளையில் பதிவு செய்து, புதிய பாதைகளை திறக்கச் செய்யும்.



# அருள் ஜோதி அன்ன ஆலயத்தின் அனுபவங்கள்

ரஞ்சித்–சவிதா தம்பதியினர் துபாய் அபுதாபியில் வசித்து வருகின்றனர். இதில் சவிதா என்பவர் அபுதாபியில் செவிலியராக பணிபுரிகிறார். இவர் களின் தாத்தாவாகிய கிருஷ்ணன் குட்டி என்பவர் வள்ளலார் மீது தீராத நம் பிக்கையும், பக்தியும் உடையவர்.

இவரின் பேத்தி சவிதா, தாத்தா நான் ஒரு மிக முக்கியமான தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்றால் அமெரிக்கா போன்ற இன்னும் பெரிய நாடுகளில் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும் என்று கூறியுள் ளார். தாத்தாவின் பக்திக் கண்டு தாத் தாவின் வழிகாட்டுதல் மூலம், அவர்கள் வள்ளலார் ஐயாவிடம் வேண்டுகோள் வைத்தனர். சவிதாவுதம் வள்ளலார் மீது நம்பிக்கை வைத்து, இந்த பரீட்சை யில் தேர்ச்சி பெற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அருட்பெ ருஞ்ஜோதியின் கருணை யால் சவிதா அந்த தேர்வில் வெற்றி பெற்றார். வள் ளலார் தன் பக்தர்களை ஒருபோதும் கைவிடாததற்கு ஓர் உண்மை சாட்சியே இவர். சவிதா அவர்களுக்கு வள்ளலார் மீது தீராத நம்பிக்கையும், அன்பும், பக் தியும் பெருகியதால், வள்ளலாருக்கு ஏதேனும் செய்ய விரும்பி தாத்தாவிடம் கூறினார். பிறகு தாத்தாவின் வழிகாட்டு தல் மூலம் அன்னதானத்திற்கு மக்களின் பசியை தீர்த்து வள்ளலாரின் ஜீவகா ருண்ய சேவையை நிறைவேற்ற மகிழ்ச்சி யுடனும், பேரன்புடனும் பசிஆற்றுவித் தலுக்கு காணிக்கை வழங்கினார். தீராத பக்தியும், கைவிடாத நம்பிக்கையும், பண்பும், அன்புமே வள்ளலாரின் புகழ் மென்மேலும் பரவ காரணம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் ஜோதி தொலைக்காட்சி பார்க்கும் அன்பு உள்ளங்களின் ஆனந்த அனுபவங்கள்



எங்களது பெயர் புஷ்பம் ராதாகிருஷ்ணன் நாங்கள் தேனி மாவட்டத்தில் பெரியகுளம் என்கிற ஊரில் வசித்து வருகிறோம். நான் எனது வீட்டில் காலை 4 மணியளவில் எழுந்த உடனே அருள்ஜோதி தொலைக்காட்சியை வைத்துவிட்டு தான் மற்ற வேலைகளை பார்ப்பேன். எனது நேரத்தை அருள் ஜோதி தொலைக்காட்சியை பார்த்து பயன் உள்ள தாக மாற்றிக் கொண்டேன். நம்மை சுற்றியுள்ள உல கத்தை பற்றி மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

எனது வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுக்கும் அருள்ஜோதி தொலைக்காட்சியின் அற்புதங்களை எடுத்துரைத்து அவர்களையும் காணச் செய்வேன். அருள் ஜோதி தொலைக்காட்சி எனது சொந்த வாழ்க்கையில் நான் கண்டுகொள் ளாத அநேக விஷயங்களை எனக்கு கற்றுத் தந்தது. எனவே நம் பிள்ளைகளுக்கும், அனைத்து பெற்றோர்களுக்கும் நல்லதையே கொடுக்க வேண்டும் என்று நினைப் பது உண்டு. அனைத்து நல்ல செயலும், விஷயமும் அத்தனையும் அருள் ஜோதி தொலைக்காட்சியில் உண்டு என்பதை இப்புத்தகத்தின் மூலமாக அனைத்து நல் உள்ளங்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு:**

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுப வத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாக தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

## தோற்றுவாய்

‘இம் மெய்ம்மொழிப் பொருள் விளக் கத்தி னெல்லை எங்ஙனமெனின் ; யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென்னும் ஷடாந்தா நுபவ சாத்தியர் களும், அவற்றை விரும்பி அவ்வழிக்கணின்ற சாதகர்களும். அந்த ராநுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ரகசியத்தைக் குறிக் குஞ் சிற்சபைக்கண்ணே சேக் கிழாரென் னும் தெய்வப்புலவர் பொருட்டு இறைவர் பர மாகாய வாக்கான் மொழியப்பட் டுச் சமரசாநுபவ சாட்சாத் காரமாய் ஆறந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடனத் திருவருட் பதத்தை வாச்சிய லட்சியமா கக் கொள்ளப்பட்ட தாகலின், ஷடாந்த சமரச லட்சியப் பொருள் எல்லையை யுடைய தென்க.’

இவ் வாறந்த முறைவைப்பு, செய் யுட்களில் சிலவிடங் களில் மாறுபட் டிருக்கிறது. அம்மாறுபாடு, பாட்டின் போக்கை ஒட்டிய தென்க. பொருள் கொள்ளும்போது அவைகளை ஒழுங்கு படக் கொண்டு கூட்டிக் கொள்ளுதல் வேண்டும். ஈண்டுச் சுவாமிகள் எழுதிய உரைச்செய்யுள் வழிநின்று ஆறந்தத்தை யும் நோக்குவோம்.

யோகாந்தம் கலாந்தம் முதலிய குறியீடு களைக் கேட் கும்போதே சிலர்க்கு வெறுப் புத் தோன்றுவதுண்டு.இவ் வந்தங்களைத் தெரிந்துகொள்வதால் இக்கால வாழ்விற்கு என்ன பயன்?’ என்று கருதுவோருமுளர். இது காலத்தின் கோலம்! என் செய்வது! காலநிலையை உன்னி எடுத்த பொருளுக் கேற்ப ஆறந்தத்தைப் பற்றிச் சிலவுரை பகர்ந்து மேற்செல்கிறேன்.

(வீ) யோகாந்தம்: யோகம் என்னுஞ் சொற்கு ஒன்றல் என்பது பொருள். ஒன்றில் உள்ளத்தை ஒன்றச்செய் வதற்கு யோகம் என்று பெயர். அவ்வொன்று தொடக்கத் தில் அவரவர் கருத்தைக் கவரும் ஏதாவதா யிருக்கலாம். தொடக்கத்தில் வேண்டற் பாலது அலையும் மனத்தை ஒன் றில் ஒன்றச் செய்வதே யாகும். ‘ஒன்றி யிருந்து நினைமின் கள் உந்தமக்கு ஊனமில்லை’ என்றார் அப்பரும்.

ஒன்றல் இருவிதம். ஒன்று இருளில் ஒன்றுவது; மற்றொன்று ஒளியில் ஒன்று வது.

மனிதன் நாடோறும் உறங்குகிறான். அவ்வுறக்கத்தில் அவன் மனம் ஓய்வு பெற்று ஒன்றுகிறது. அஃது எதன்கண் ஒன்றுகிறது? இருளில் என்று சொல்ல வேண்டுவதில்லை. இது கேவலம் என்று சொல்லப்படும்.

சுவாமிகள் குறிப்பிட்ட யோகம் முதலி யன சுத்தத் தின்பாற் பட்டன. சுத்தமா வது இருளில் உறங்காது, ஒளியில் உறங்கு வது. இதனை அறிதுயில் அல்லது யோக நித்திரை என்றுஞ் சொல்வதுண்டு.

மேற்போந்த இரண்டுந் தூக்கமே. ஒன்று மயக்கத் தால் இருளில் தூங்குவது; மற் றொன்று அறிவு விளக்கத் தால் ஒளியில் தூங்குவது அதாவது அமைதியுற்றிருப் பது. இவ் வறிதுயிலை,

**சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே**
**சோம்பர் கிடப்பது சுத்த ஒளியிலே**
**சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்**
**சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே**

என்றும்

**தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முளே**
**தூங்கிக் கண்டார் சிவயோகமுந் தம்முளே**
**தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முளே**
**தூங்கிக் கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே**

என்றும் திருமூலர் விளக்கி யிருத்தல்

காண்க.


**தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்**

என்று சுவாமிகளும் அறிதுயிலைச் சிறப்பித்திருக்கிறார்.

மூச்சை ஈர்ப்பதும், நிறுத்துவதும், விடுவதும் யோகம் என்று சிலர் கூறுப. இஃது உடல்நலன் கருதிச் செய்யப் படும் மலயோகப் படிகளுள் ஒன்று. முயன்று மூச்சை ஈர்த்து, நிறுத்தி, விடாமலும் யோகஞ் செய்யலாம். இஃதே அறிது யிலின்பாற்பட்ட அமலயோக மாகும். அமலயோகர் உளவை யெலாம் என்று சுவாமிகளும் அமலயோக உண்மையை உணர்த்தியுள்ளார்.

யோகக் கூறுகள் பலப்பல. அவற்றைக் கலையளவி லாதல் பயில மக்கள் இப் பொழுது விழைகிறார்களில்லை. யோக மென்பது இழிவாகவுங் கருதப்படுகிறது. அடயோகம் என்னும் பெயரால், சில கயவர் நிகழ்த்தும் அடாத செயல் களால், யோகக் கல்விக்கே இடையூறு நேர்ந்திருக் கிறது.

யான் இளமைதொட்டுக் கல்லூரி விடுத்த நாள் முதல் உண்மை யோகி களைத் தேடித் தேடித் திரிகிறேன்; எனது



வாணாளில் யோகிகள் என்று சொல் லப்படுவோர் பலரைக் கண்டிருக்கிறேன்; அவருள் இரண்டொருவர் தவிர ஏனையோ ரெல்லாரும் அசட்டு யோகிகளே யாவர். அவர்தம் மோசங்களையும் ஏமாற் றங்களையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். அப்பேய்களைப் பற்றிய நினைவும் ஈண்டு வேண் டுவதில்லை. மேற்குறிப்பிட்ட இரண்டொ டாரு நல்லாரும் இல்லறத்தி ருப்பவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். யோகத் துறைகளுள் தலைசிறந்தது தியானயோக மென் பது எனது உள்ளக்கி டக்கை. மூச்சைப் பிடிக்குஞ் சிலர், தியா னயோகத்தை எள்ளி நகையாடுவதுண்டு. நேரிய தியான யோகம் பின்னைப் பெருநிலை கூட்டுதல் ஒருதலை. தியானத் தில் அகத்தியானமே விழுமியது. மலயோ கம், உடல்நலனுக்குரிய வாயூறல் என்னும் அமுதநீர் வழங்கு வதுபோல, அகத்தி யான மெனும் அமலயோகமும் உயிர் நலனுக்குரிய ஆனந்தநீரைப் பெருக்கிப் பொழியும். அவ் வமிர்த தாரை எழுத்தில் அடங்குவதோ?

'அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க்கசிந் துருக என்பர மல்லா இன்னருள் தந்தாய் யானிதற் கில னொர்கைம் மாறு முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த முத்தனே முடிவிலா முதலே தென்பெருந் துறையாய்சிவபெரு மானே சீருடைச்சிவபுரத்தரைசே'

**தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே**
**நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியுங்**
**குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ**

அன்பர்களே ! இம் மணிவாச கத்தை நோக்குங்கள்; நோக்கி நோக்கிக் குழைந்து குழைந்து உருகுங்கள் ; உருகி உருகி அழுங்கள்.

அவ்வழுகை நாயேனுக்கு என்று வருமோ' என்று அழுகிறேன். தியானயோ கத்தின் இயல்பை ஏழையேன் எச்சொல் லால் சொல்வேன்! அழுதடி அடைந்த ஆனந்த மாதவனார் அமுதமொழியைப் பாருங் கள். அம்மொழி, தியானயோகத்

*தின் இயல்பைத் தெரிக்கும்.*

*தியான யோகத்தின் மாண்பை இராம லிங்க சுவாமிகள் ஆ! ஆ ! ஓரிடத்திலா ! பல்லாயிரம் இடத்தில் பாடிப்பாடிப் பரவுகிறார். அப்பாடல்களை யெல்லாம் ஈண்டுக் காட்ட இயலுங்கொல்! எனக்கி னிய என் உயிர்க்கினிய சில பாடல் களை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன். அப்பாடல் களைப் பன்முறை பாடிப் பாடி இன்பத்தில் தோயுங்கள்.*

நினைந்துநினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துது நாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே

**'கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங்**
**குருவே சண் முகங்கொண்ட கோவே வஞ்ச**
**வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும்**
**வானமுதே யானந்த மழையே மாயை**
**வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான**
**வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்**
**தீதகன்ற மெய்யடியார் தமக்கு வாய்த்த**
**செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே**

**அருளருவி வழிந்துவழிந் தொழுக வோங்கும்**
**ஆனந்தத் தனிமலையே அமல வேதப்**
**பொருள்ளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்**
**பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி**
**இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த**
**ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே**
**தெருளளவும் உளமுழுதுங் கலந்து கொண்டு**
**தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே**

**வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கண்**
**மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற**
**என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும் இந்தி ரியம் அவைகலந்துள் இயங்கு கின்ற**
**அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்**
**ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி**
**இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி**
**எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே**

**தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்**
**தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச வெண் ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேயின்**
**இசைவீசத் தண்பனி நீ ரெடுத்து வீசப்**
**பெண்ணமுத மனைவியர்விண் ணமுத மூட்டப்**
**பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்**
**கண்ணழதத் துடம்புயிர்மற் றனைத்து மின்பங்**
**கலந்துகொளத் தருங்கருணைக் கடவுட் டேவே'**

*இவ்வாறு ஒருமையில் ஒன்றும் பயிற்சி முதிர முதிர, அதன் முடிவில் பலதிற அக நிகழ்ச்சிகள் தோன்றிக் கொண்டே போகும். சுவாமிகள் அந்நிகழ்ச்சிகளைக் கலாந்தம் முதலியனவாக முறைப்படுத்தித் தொகுத்துக் காட்டுகிறார். ஆகவே, யோக முடிவில், முதலில் விளங்குவது கலை எனக் கொள்க.*

*அது*

*(ii) கலாந்தம் : கலை என்பது ஒரு தத் துவம். அது நியதியினின்றும் பிறப்பது; வித்தையின் தோற்றத்துக்கு நிலைக்களனா யிருப்பது. இக்கலையின் வினை, அவித்தை அல்லது ஆணவம் என்னும் மறைப்பை அவரவர் முயற்சிக்கேற்ற அளவில் சிறிது சிறிதாக நீக்கத் துணைபுரிவது.*

*ஆன்மா, கலையில் தோய்தற்குமுன் னர்ச் சிறிதும் விளக்கமின்றிக் கிடக்கிறது. கலையோடு கூடிய பின்னர் அஃது அறிவு விளக்கம் பெறுகிறது. விளக்கம் சித்தியார் முதலிய நூல்களிற் காண்க.*


*கலைக்கு இருதலையுண்டு. உடுக்கையை நினைத்துக் கொள்ளுங்கள். ஒருதலை இருண்மயமா யிருக்கும்; மற் றொன்று ஒளிமயமா யிருக்கும். கலையின் இருட் பக்கம் விளங்குவது மயக்க அறிவு. இது கலைஞானம் எனவும் படும். கலைபின் ஒளிப்பக்கம் விளங்குவது மெய்யறிவு. இதை உண்மை ஞானம் என்றுங் கூறுப.*

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| **1.HOW SOUL BECOME LIGHT** | - ரூ.120 |
| 2.தற்சுதந்திர இன்மை | - ரூ.50 |
| 3.ஞானசரியை | - ரூ.40 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5.மகா மந்திரம் | - ரூ.5 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. ஆறாம்திருமுறை மற்றும் உரைநடை | - ரூ.500 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா-விடை | - ரூ.30 |
| 13. அருட்பெருஞ்ஜோதி அட்டகம் விளக்கவுரை | - ரூ.40 |
| 14. அகவல் பாராயண திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயண திரட்டு (பெரியது) | - ரூ.30 |

# மூலிகை மருந்துகள்

| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.முக்குபர் மூலிகை தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலை கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகை தைலம் | - ரூ.40 |



## பதிவிளக்கம்

அறிவுமயமான திருச்சிற்றம்பலத்திலே விளங்குகின்றஒருவரேயான கடவுள், சூரியன், சந்திரன், விண்மீன், பிண்டம், அண்டம், உலகப்பொருள்கள், உலக உயிர்கள் ஆகியவற்றின் அகத்தும் புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும் பெரும் பேரொளியாய் விளங்குகின்றார்.

இரவிமதி உடுக்கள்முதல் கலைகள்எலாம் தம்மோர்
இலேசமதாய் எண்கடந்தே இலங்கியபிண் டாண்டம்
பரவுமற்றைப் பொருள்கள்உயிர்த் திரள்கள்முதல் எல்லாம்
பகர்அகத்தும் புறத்தும்அகப் புறத்துடன்அப் புறத்தும்
விரவிளங்கும் நீக்கமற விளங்கிஅந்த மாதி
விளம்பரிய பேரொளியாய் அவ்வொளிப்பே ரொளியாய்
உரவுறுசின் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர்,

– திருவருட்பா ஆறாம் திருமுறை

# மாணவர்களுக்கான வார்த்தை விளையாட்டு


1. பொருள்நிலை----------------பொதுவகை முதலிய அருஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

2. உறவினில்-----------------உறவினில் பகையும் அறன்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

3. பகையினிற்------------------ பகையினில் உறவும் அகைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

4.பாதியும் முழுதும்------------- அந்தமும் ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

5. சிறுமையில்-------------- சிறுமையில் பெருமையும் அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி




சென்ற மாத மாணவர்களுக்கான குறுக்கெழுத்து விளையாட்டு போட்டிக்கான விடைகள்.

1. நிறுத்திய
2. நீக்கிய
3. நிலைநடு
4. அனல்நடு
5. அவைதர

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாக
தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**6. தன்னிறவு சாட்சியல்லாற் சாயுச்சி யப்பயனைச்**
**சொன்னபிழை கெட்டேன் தொலைப்பரோ–முன்னே**
**நடவா வழிஒருவன் சொல்ல நடந்து**
**தடுமாறி நொந்தறியா தார்.**

★ ***தன்னறவு சாட்சியல்லால் சாயுச்சியப் பயனைச் சொன்ன பிழை கெட்டேன் என்றும்; இதனால் வரும் பாவம் எக்கா லத்தில் நீங்கும் என்பதை உதாரணங் காட்டி விளக்குக?***

*சிவானுபவம் விளங்கிற்று என்பதற்கும், விளங்கவில்லை என்பதற்கும் தன்னறிவே சாட்சியாய் விளங்கவும்; அனுபவம் தனக்கு உண்டு போல் காட்டி, பிறருக்கு வீடு அடையும் நெறியான உபதேசப்பொருளை கூறிய பாவங்களை கெட்டேன் என்றார். இந்த பாவம் எக்காலத்தில் நீங்குமோ? என்று கூறுகின்றார். (சாதகன் ஞான உபதேசம் பண்ணல் குற்றம் (2–ம்) ஒருவன் முன் செல்லாத ஓர் ஊருக்குச் செல்லுங்கால் அவ்வூர் அடையும் வழியாதென்று, வழிதெரியாத ஒருவனை கேட்க, அவன் தனக்கு தெரிந்தாற் போன்று வழி காட்ட, முன்னிருந்த ஊரும், பின்னடையும் ஊரும் அன்றி நடுவிடைத் தடுமாறி, உடலும் மனமும் வருந்தி நின்றார் போல என்பதாம்.*

**7. பொய் போகப் போகப் பொருந்திப் பொருள்தானாஞ்**
**சையோக போக தரங்கத்தில்–நையும்**
**பரிபாகங் கண்டு பதையாமல் பார்க்குங்**
**குருவேகாண் ஞானக் குரு.**

★ ***ஞானாசிரியர் என்பவர் யாவர்? பொய் போகப் போகப் பொருந்திப் பொருள் தானாம் என்றது என்ன?***

*மெய்ப்பொருள் தானாகிய அனுபவ சக்தியில் தோன்றும் ஆனந்த கடல் அலையில் கரைந்து போகும் தீவிர தரப் பக்குவ மாணாக்கானது அறிவு அணுவளவேனும் பதையாது அடங்க, கிருபா நோக்கம் வைக்கும் ஆசாரியனே ஞான சிரியாவான்.*

*பொய்யாகிய முப்பத்தாறு கருவிகள் நீங்க, நீங்கவே அவைகளைப் பகுத்தறிந்து நீங்கி நின்ற அறிவு தானென்று தன்னை அருளால் உள்ளபடி கண்டு, பின்பு அருள் தரிசனம், பரை தரிசனம், பரை யோகம் இவற்றை அடைந்து, மெய்ப்பொருள் அனுபவ சக்தி தோன்றும்; ஆதலால் பொய் போகப் போக என்றார்.*

*(சையோகமம்=அனுபவ சக்தி)*

**8. தேனுண்(டு) உமிழுந் திறம்போல் சிவானந்த**
**மோனந் துளும்பி மொழிகாலத்– தேநின்று**
**தோன்றிருது போலுமொன்றைச் சுட்டாது கேட்பவர்கட்(கு)**
**ஆன்ற தவம் வேதம் அது.**

★***இருதுபோல் ஒன்றையும் சுட்டாது கேட்பவர்கட்கு ஆன்ற தவம், அதுவே வேதம் என்றது எப்படி?***

*இருது காலங்களில் செடியில் இலை, பூ,*

காய், கனி ஏற்படும்போது செடி எவ்வித மாறுதலில்லாமல் இருப்பது போல, கரு விகளோடுங் கூடியிருந்தும் அவற்றுள் தாக்கற்று நின்று கேட்க வேண்டும்; இதுவே தவப்பயனாம். அங்ஙனம் நின்று கேட்கும் மொழியாகலின் அதனை வேதம் என்றார்.

**9. இருளில் சுடரென்ன இந்துரவி என்ன**
**அருளை கடந்த பாரா நந்தர்– திருவாக்(கு)**
**அமுதமழை அம்பரச்சொல் நன்னிமித்தம் ஆங்கே**
**மமதையிரா(து) என்றே மதி.**

★ **ஞானாசிரியாரின் உபதேச மொழியை எதற்கு ஒப்பிடுகின்றார்?**

மூவிதச் சுடர் என்பது விளக்கொளியும், சந்திர ஒளியும், சூரிய ஒளியும் ஆகிய மூவிதமாய்த் தோன்றுவன போல் அருள் தோன்றும்.

மழைநீர் கைமாறின்றிப் பொழியனும், உற்பத்தி நாசம் உளவாகலின் அம்மழையை உவமை கூறாமல் அமுத மழை போலும் என்றார்.

ஆகாசவாக்கு உண்மை அறிவித்தல் போல், உண்மையாகிய சிவத்தை அறிவித்தலின் அம்பரசொல் என்றார்.

நல்ல நிமித்தம் கேட்டோர்க்குத் தாங்கருதிய பொருள் கைகூடல் போல், இதனைக் கேட்டோருக்கு தாம் கருதிய வீடு கை கூடுதலின் நன்னிமித்தம் போல் என்றார்.

**10. சாயா புருடனைப்போல் ஆனந்த மேதடித்த**
**மாயா வயிரி மனமாண்ட–நேயவுரை**
**ஆவேசர் வீரர் அரசர் மடலாளர்**
**சாவாநந் தர்க்குச் சரி.**

★**மாயை என்றால் என்ன? அதன் வயிரி யார்? உதாரணங் காட்டி விளக்குக?**

தன் நிழலைப் பார்த்துப் பின் ஆகாயத்தை உற்றுநோக்குகின்றார்க்கு, அவ்வாகாயத்தின்கண் புருட வடிவம் போல் தோன்றும்; அந்நிழற் காட்சியே சாயா



புருடன் என்பர். இதற்கு எதிரி ஞான ஆசிரியரது மனாதீதமான அருள்மொழியே ஆகும்.

ஆவேசம் ஏறினோர் தற்செயலின்றி கூறுதல்போல், முக்கரணங்களையும் அடக்கி அருளாய் நின்று கூறுவது போலவும்;

மாவீரருக்கு எதிரியை கொல்லுவதே கருத்தாகக் கூறுவது போல், அறிவிற்கு எதிரீடாய்த் தோன்றுவனயாவும் கொல்லுவதே கருத்தாகக் கூறினமையாலும்;

அரசர் கூறிய ஆணைப்படி இம்மைப் பயனாக்குதல் போல் இவர் கூறிய ஆணைப்படி மறுமைப் பயனாக்குதல் போலவும்;

மடலாளர் மற்றொன்றையுங் கூறாது தாம் நச்சிய மாதினையே புகழ்ந்து கூறுதல் போல, சரியையாதிகளைக் கூறாது தமது ஞானத்தையே புகழ்ந்து கூறுதலானும்;

சாவானந்தர், தாம் சாவதே இன்பமாகக் கூறுதலானும், தற்போத ஒழிவையே இன்பமாகக் கூறுதல் போல்;

ஆவேசம் ஏறினோர், மாவீரராயினார், அரசர், மடல் எடுத்தவர், சாவானந்தர் ஆகியோர் இவர்களது மொழிக்குச் சரியாம்; ஞான ஆசிரியரது திருவாக்கு.

# அருள்ஜோதி TV

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...

அருள்ஜோதி

**Aruljothi TV APP**




**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**



**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com



**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**



**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012